

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (25.09.2024) தலைமைச் செயலகத்தில், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த செல்வி எஸ்.சாந்தா சர்மிளா சந்தித்து, 5 நிமிடங்களில் ஒரே நேரத்தில் இரண்டு கைகளிலும் பன்னிரெண்டு திருக்குறளை எழுதி சாதனை படைத்ததற்காக India Book of Records வழங்கிய சான்றிதழையும், ஒரு நிமிடத்தில் 14 கண்ணாடி பிரதிபலிப்பு தமிழ் எழுத்துக்களை (Mirror Image) இரண்டு கைகளிலும் ஒரே நேரத்தில் எழுதி சாதனை படைத்ததற்காக International Book of Records வழங்கிய சான்றிதழையும் காண்பித்து வாழ்த்துப் பெற்றார். உடன் அவரது பெற்றோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (25.09.2024) தலைமைச் செயலகத்தில், SIFY Technologies நிறுவனத்தின் தலைவர் ராஜு விகிசனா (Thiru Raju Vegesana) சந்தித்துப் பேசினார். உடன் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தக துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தக துறை செயலாளர் வி.அருண் ராய், சிப்காட் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே.செந்தில் ராஜ், SIFY நிறுவனத்தின் தலைவர் (Strategic Investment and Relationship) தலீப் கவுல், கூடுதல் இயக்குநர் ஸ்ரீவாணி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### மாநில அளவில் பட்டு மற்றும் பருத்தி இரகங்களுக்கான

# சிறந்த கைத்தறி நெசவாளர் - சிறந்த வடிவமைப்பாளர் விருதுகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, செப். 27 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.09.2024) தலைமைச் செயலகத்தில், 2023-24ஆம் ஆண்டிற்கான பட்டு மற்றும் பருத்தி இரகங்களில் சிறந்த கைத்தறி நெசவாளர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்ட 6 விருதாளர்களுக்கு பரிசுத்தொகையாக 20 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களையும், சிறந்த வடிவமைப்பாளர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்ட 3 வடிவமைப்பாளர்களுக்கு பரிசுத் தொகையாக 40 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை யும், போட்டி தேர்வு மூலம் சிறந்த இளம் வடிவமைப்பாளர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்ட 3 வடிவமைப்பாளர்களுக்கு பரிசுத்தொகையாக 2.25 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களையும் வழங்கி சிறப்பித்தார்.**

தமிழ்நாட்டின் கைத்தறி தொழிலானது தொன்மையும், வரலாற்று பாரம்பரிய சிறப்பும், நுணுக்கமான பல்வேறு வேலைப்பாடுகளையும் கொண்டதாகும். கைத்தறி தொழிலில் தமிழ்நாடானது பிற மாநிலங்களுக்கு முன்னோடியாக விளங்கு வதுடன், உலகளவில் பிரசித்தி பெற்ற இரகங்களான காஞ்சிபுரம் பட்டு, ஆரணி பட்டு, திருபுவனம் பட்டு மற்றும் பவானி ஜமக்காளம் போன்ற இரகங்களை உற்பத்தி செய்து வருகின்றது. தமிழ்நாட்டில் 1,112 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு அரசின் சீரிய திட்டங்களின் வாயிலாக தொடர் வேலை வாய்ப்பும், உத்திரவாதமான கூலியும் உறுதி செய்யப்பட்டு வருவதுடன், நெசவாளர் நலத்திட்டங்கள் வாயிலாக பல்வேறு நலத் திட்டங்களும் அரசால் வழங்கப்பட்டு வருகின்றன.

**சிறந்த நெசவாளர் விருது!**

அரசால் கைத்தறி நெசவாளர்களுக்கென செயல்படுத்தப்பட்டு வரும் ஏராளமான திட்டங்களில் ஒரு பகுதியாக புதுமையான மற்றும் கண்கவர் வடிவமைப்புகளை புகுத்தி தற்போதைய சந்தை தேவைக்கேற்ப பட்டு மற்றும் பருத்தி கைத்தறி இரகங்களை உற்பத்தி செய்து கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருந்து வரும் கைத்தறி நெசவாளர்களை ஊக்குவிக்கும் வகையில் “சிறந்த நெசவாளர் விருது” ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றது. இவ்விருதிற்கான முதல் பரிசிற்கான பரிசுத்தொகை 5 இலட்சம் ரூபாயும், இரண்டாம் பரிசிற்கான பரிசுத் தொகை 3 இலட்சம் ரூபாயும், மூன்றாம் பரிசிற்கான பரிசுத் தொகை 2 இலட்சம் ரூபாயும் வழங்கப்பட்டு வருகிறது.

**சிறந்த வடிவமைப்பாளர் விருது!**

ஜவுளித்துறையில் அதிகரித்துவரும் போட்டியினை சமாளிப்பதற்கும் மற்றும் மாறிவரும் நவீன ரசனைக்கேற்ப புதிய வடிவமைப்புகளை உருவாக்குவதற்காக அரசால் சிறந்த வடிமைப்பாளர் விருது ஆண்டு தோறும் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருதிற்கான முதல் பரிசிற்கான பரிசுத் தொகை 25 ஆயிரம் ரூபாயும், இரண்டாம் பரிசிற்கான பரிசுத்தொகை 10 ஆயிரம் ரூபாயும், மூன்றாம் பரிசிற்கான பரிசுத்தொகை 5 ஆயிரம் ரூபாயும் வழங்கப்பட்டு வருகிறது.

**சிறந்த இளம் வடிவமைப்பாளர் விருது!**

ஜவுளித் தொழிலின் நுட்பங்கள், வடிவமைப்பு மற்றும் காலமாற்றத்திற்கேற்ற வண்ணங்களின் போக்கினை கணித்தல் ஆகியவற்றில் பங்களிப்பு திறன் கொண்ட வடிவமைப்பாளர்களை கண்டறிந்து ஊக்குவிக்கும் பொருட்டும், அவற்றை தற்கால சந்தை மற்றும் ஆடை அலங்கார நிலவரங்களுக்கேற்ப கைத்தறி துணிகளாக உற்பத்தி செய்யும் பொருட்டும் தமிழ்நாடு அரசால் மாநில அளவிலான “சிறந்த இளம் வடிவமைப்பாளர் விருது” 2022 - 23ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்விருதிற்கு முதல் பரிசிற்கான பரிசுத்தொகை 1 இலட்சம் ரூபாயும், இரண்டாம் பரிசிற்கான பரிசுத்தொகை 75 ஆயிரம் ரூபாயும், மூன்றாம் பரிசிற்கான பரிசுத்தொகை 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்பட்டு வருகிறது.

**சிறந்த நெசவாளர் விருது பெறுவோர் விவரங்கள்**

2023-2024ஆம் ஆண்டுக்கான மாநில அளவில் பட்டு இரகத்தில் சிறந்த நெசவாளர் விருதுக்கான முதல் பரிசினை காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினர் ட்டி. சந்திரசேகரன் அவர்களுக்கும், இரண்டாம் பரிசினை ஆரணி பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினர் எம்.டி.குமரேசன் அவர்களுக்கும், மூன்றாம் பரிசினை காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினர் எஸ். புகழேந்தி அவர்களுக்கும்;

பருத்தி இரகத்தில் சிறந்த நெசவாளர் விருதுக்கான முதல் பரிசினை பரமக்குடி, அன்னை சாரதா மகளிர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினர் திருமதி.ட்டி.ஜே.பிரேமா அவர்களுக்கும், இரண்டாம் பரிசினை பரமக்குடி, லோகமான்ய திலகர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினர் டி.எஸ்.அலமேலு அவர்களுக்கும், மூன்றாம் பரிசினை கோயம்புத்தூர், வதம்பச்சேரி ஸ்ரீ நடராஜர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினர் திருமதி. டி.மகாலெட்சுமி, அவர்களுக்கும்;

**சிறந்த வடிவமைப்பாளர் விருது பெறுவோர் விவரங்கள்!**

மாநில அளவிலான சிறந்த வடிவமைப்பாளர் விருதுக்கான முதல் பரிசினை, காஞ்சிபுரம் முருகன் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினர் எஸ்.குமரவேல் அவர்களுக்கும், இரண்டாம் பரிசினை காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் வடிவமைப்பாளர் டி. பார்த்திபன், அவர்களுக்கும், மூன்றாம் பரிசினை தந்தை பெரியார் பட்டு மற்றும் பருத்தி கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினர் திருமதி எம். கமலவேணி, அவர்களுக்கும்;

**என 9 விருதாளர்களுக்கு 20 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகள் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை முதலமைச்சர் வழங்கி சிறப்பித்தார்.**

**சிறந்த இளம் வடிவமைப்பாளர் விருது பெறுவோர் விவரங்கள்!**

மாநில அளவிலான சிறந்த இளம் வடிவமைப்பாளர் விருதுக்கான முதல் பரிசினை கரூர், வள்ளுவர் அறிவியல் மற்றும் மேலாண்மை கல்லூரியில் நவநாகரிக தொழில்நுட்பம் மற்றும் ஆடை வடிவமைப்பு இளநிலை அறிவியல் துறையில் முதலாமாண்டு பயிலும் மாணவி செல்வி.கே. தர்ஷணா அவர்களுக்கும், இரண்டாம் பரிசினை மதுரையை சேர்ந்த ந.சங்கர், சுயசார்பு வடிவமைப்பாளர் அவர்களுக்கும், மூன்றாம் பரிசினை கோயம்புத்தூர், பி.எஸ், ஜி. பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் ஆடை அலங்கார வடிவமைப்பில் இளங்கலை தொழில்நுட்பவியல் துறையில் முதலா மாண்டு பயிலும் மாணவி செல்வி.பி.ரா.ஹரிணி அவர்களுக்கும்;

என 3 விருதாளர்களுக்கு 2.25 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகள் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை முதலமைச்சர் வழங்கி சிறப்பித்தார்.

இந்த நிகழ்ச்சியில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை முதன்மைச் செயலாளர் தர்மேந்திர பிரதாப் யாதவ், கைத்தறித் துறை இயக்குநர் அ.சண்முகசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### உளுந்தூர்பேட்டை அருகே - சாலை விபத்தில்

# உயிரிழந்த 6 பேர் குடும்பங்களுக்கு ஆறுதல் - நிதி உதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, செப். 27 -

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை, மேட்டத்தூர் கிராமம், திருச்சி - சென்னை தேசிய நெடுஞ்சாலையில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

உளுந்தூர் பேட்டை அருகே சாலை விபத்தில் உயிரிழந்த 6 பேர் குடும்பங்களுக்கு ஆறுதல் மற்றும் நிதி உதவி பற்றி அறிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பு வருமாறு: -

திருச்செந்தூருக்கு சுற்றுலா சென்றுவிட்டு திரும்பும் வழியில் கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர் பேட்டை வட்டம், மேட்டத்தூர் கிராமம், திருச்சி - சென்னை தேசிய நெடுஞ்சாலையில் ஜே.எஸ்.நகர் அருகில் 25.09.2024 அன்று அதிகாலை சுமார் 3.30 மணியளவில் TN73 M 8384 என்ற பதிவெண் கொண்ட வேன் ஒன்று எதிர்பாராதவிதமாக சாலையோர மரத்தில் மோதிய விபத்தில் இராணிப்பேட்டை மாவட்டம், மாம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த ரவி (வயது 60) த/பெ.குணசேகர், செல்வம் (வயது 50) த/பெ.பச்சையப்பன், ராமலிங்கம் (வயது 50) த/பெ. குப்புசாமி, முருகன் (வயது 44) த/பெ.ராஜகோபால், துரை (வயது 35) த/பெ.ராதாகிருஷ்ணன் மற்றும் சக்தி (வயது 20) த/பெ.மகேந்திரன் ஆகிய 6 நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து விழுப்புரம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு சிறப்புச் சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாயும்,

காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### இலட்சியக் கனவை நிறைவேற்ற அயராது பாடுபடுவோம்!

# திராவிட அருள்நெறியாளர் பி.டி.ராஜன் நினைவைப் போற்றுவோம்!

## டிஜிட்டல் சிறப்பு மலரை வெளியிட்டு - முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

**சென்னை, செப். 27 -**

**திராவிட அருள்நெறியாளர் பி.டி.ராஜன் அவர்களின் நினைவைப் போற்றுவோம் என்றும் அவரது இலட்சியக் கனவை நிறைவேற்ற அயராது பாடுபட வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் “தமிழவேள் பி.டி.ராஜன் நினைவுகளின் 50” என்ற டிஜிட்டல் சிறப்பு மலரை வெளியிட்டது குறித்து தனது சமூக வலைதளப் பதிவில் பி.டி.ராஜன் அவர்களுக்கு புகழாரம் சூட்டியுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

**திராவிட இயக்கத்தின் வேராக விளங்கும் நீதிக்கட்சியின் தலைவர்களுள் ஒருவரான தமிழவேள் பி.டி.ராஜன் அவர்களுடைய 50ஆம் ஆண்டு நினைவு நாளில், அவரது வாழ்க்கையையும் அவரது தொண்டையும் பதிவு செய்யும் விதமாக உருவாகியுள்ள “தமிழவேள் பி.டி.ராஜன் நினைவுகளில் 50” என்ற டிஜிட்டல் மலரை வெளியிட்டேன்.**

**அம்மலருக்கு நான் வழங்கிய வாழ்த்தையும் பகிர்கிறேன்.**

- என்று முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார். முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் மலருக்காக அவர் வழங்கிய வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**திராவிட அருள்நெறியாளர் பி.டி.ராஜன் புகழ் போற்றுவோம்!**

‘எல்லோருக்கும் எல்லாம்’ என்கிற இன்றைய திராவிட மாடல் அரசின் கொள்கைக் கோட்பாட்டினை, ஒரு நூற்றாண்டுக்கு முன்பாகவே முன்னெடுத்த திராவிட அரசியல் இயக்கமான நீதிக் கட்சியின் முன்னோடித் தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர் தமிழவேள் பி.டி.ராஜன் அவர்கள்.

நீதிக்கட்சியின் மூன்று பெரும் தலைவர்களான பிட்டி தியாகராயர் - டாக்டர் நடேசனார் - டி.எம்.நாயர் ஆகியோரின் சமூகநீதி எனும் மிகப்பெரும் இலட்சியத்தைச் செயல்வடிவமாக்கிய பனகல் அரசர், ஏ.டி.பன்னீர்செல்வம் உள்ளிட்ட தளகர்த்தர்கள் வரிசையில் பி.டி.ராஜன் அவர்களுக்குத் தனி இடம் உண்டு.

பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் இரட்டையாட்சி முறையில் 1920-ஆம் ஆண்டு அன்றைய சென்னை மாகாணத்திற்கு நடந்த தேர்தலில் நீதிக்கட்சி வெற்றி பெற்று ஆட்சியமைத்தது. நீதிக்கட்சியின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் இளம் வேட்பாளராக இருந்தவர் பி.டி.ராஜன் அவர்கள். அவருடைய சிந்தனைகளும் செயலாற்றலும் மிகுந்த முதிர்ச்சியுடையனவாக இருந்தன. வகுப்புவாரி இடஒதுக்கீட்டு ஆணை, பெண்களுக்கு வாக்குரிமை, பொது இடங்களில் அனைத்துச் சமுதாயத்தினருக்கும் சமஉரிமை போன்ற அரசாணைகளை வெளியிட்டு, சமத்துவச் சமுதாயத்திற்கு நீதிக்கட்சி அடித்தளமிட்டது.

பனகல் அரசர் தலைமையிலான அமைச்சரவை உருவாக்கிய அறநிலையப் பாதுகாப்புச் சட்டம், கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கம் போன்றவற்றில் பி.டி.ராஜன் அவர்களின் பங்களிப்பு சிறப்பான முறையிலே அமைந்திருந்தது. கூட்டுறவுச் சங்கங்கள் விளிம்புநிலை மக்களின் வாழ்வாதாரம் பெருகத் துணை நின்றன. அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் கடவுளின்முன் அனைவரும் சமம் என்பதை நிலைநாட்டியது.

தமிழுக்கும் - தமிழ் மாணவர்களுக்கும் பயன் தரும் வகையில் ஒரு பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் நீதிக்கட்சி ஆட்சியில் அமைக்கப்பட்ட குழுவில் இடம் பெற்று ஆலோசனைகளை வழங்கியவர் பி.டி.ராஜன் அவர்கள். அவருடைய ஆலோசனைகள் அடங்கிய அந்தக் குழுவின் பரிந்துரை அடிப்படையில் உருவானதுதான் புகழ்பெற்ற அண்ணாமலை பல்கலைக்கழகம்.

அன்றைய மதுரை மாவட்டம்



உத்தமபாளையத்தில் பிறந்த பி.டி.ராஜன் அவர்கள் ஆன்மீகத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர். தமிழ்மொழியின் மீது தான் கொண்ட எல்லையில்லா ஈடுபாட்டினால் தமிழ்த் தொண்டையும், பல நூற்றாண்டுகளாகப் புனரமைக்கப்படாத பல முக்கிய திருக்கோயில்களைப் புனரமைத்து ஆன்மீகத்தைச் செழுமைப் படுத்திடும் வகையில் இறைத் தொண்டையும் மேற்கொண்ட பெரியவர் தமிழவேள் பி.டி.ராஜன் அவர்கள் என்றால் அது மிகையல்ல!

மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயிலைப் புனரமைத்துக் குடமுழுக்கு நடைபெறச் செய்தார். சபரிமலை ஐயப்பன் திருக்கோயிலில் ஐம்பொன் சிலையை நிறுவினார். அதன் மூலமாக பக்தர்கள் பலரும் சபரிமலை செல்வதை வழக்கமாகக் கொண்டனர். பழமுதிர் சோலை, வடபழனி உள்ளிட்ட பல திருக்கோயில்களைச் செப்பனிட்டுத் திருப்பணி செய்த திராவிட அருள்நெறியாளர் பி.டி.ராஜன் அவர்கள். நீதிக்கட்சி ஆட்சிக்காலத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்த அவர், சென்னை மாகாணத்தின் முதல்அமைச்சராகவும் பொறுப்பேற்று, தனது தூய தொண்டினால் அந்தப் பதவிக்குப் பெருமை சேர்த்தார்.

ஆளும்கட்சியாக இருந்தபோது மட்டுமல்லாமல், நீதிக்கட்சியின் சார்பில் தனியொருவராகச் சட்டமன்றம் சென்ற நிலையிலும், தம் கருத்துகளை வலிமையாகப் பதிவு செய்து, தாம் கொண்ட கொள்கைகளில் இருந்து தடம் மாறாமல் பயணித்த கொள்கைச்சுடர் அவர்.

கட்சிப் பாகுபாடுகள் கடந்து அனைவராலும் போற்றப்படும் சிறந்த பண்பாளரான தமிழவேள் பி.டி.ராஜன் அவர்களுடைய 50-ஆவது நினைவு ஆண்டு கடைப்பிடிக்கப்படும் இவ்வேளையில், தந்தை பெரியார் தொடங்கிய சுயமரியாதை இயக்கத்திற்கு நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகிறது. சுயமரியாதை இயக்கத்தின் லால்குடி தாலுகா முதலாவது மாநாடு 1928-ஆம் ஆண்டு ஜூன் 9, 10 ஆகிய நாட்களில் நடைபெற்றபோது அதில் பங்கேற்றுச் சிறப்புரையாற்றியவர் பி.டி.ராஜன் அவர்கள். தந்தை பெரியாரின் குடிஅரசு ஏடு அவரது சொற்பெருக்கை வெளியிட்டுள்ளது.

அரசுப் பணிகளில் அனைவருக்கும் வாய்ப்பு, கோயில் கருவறை வரை சென்று அர்ச்சனை செய்யும் உரிமை ஆகியவற்றை அந்த மாநாட்டில் வலியுறுத்திப் பேசிய திராவிட அருள்நெறியாளர் பி.டி.ராஜன் அவர்கள், தந்தை பெரியாரின் சுயமரியாதைத் திருமண முறையைப் பாராட்டியதுடன், இத்திருமணங்களைச் சட்டப்படி உரிமையாக்கிட வேண்டும் என்றும் அதற்கேற்பச் சட்டங்களைத் திருத்தியமைத்துக் கொள்ளும் படியும் தன் நண்பரான பெரியாருக்கு எச்சரிக்கை கலந்த வேண்டுகோளையும் முன்வைத்திருக்கிறார்.

1928இல் அவர் முன்வைத்த கோரிக்கை ஏறத்தாழ 40 ஆண்டுகள் கடந்து, பேரறிஞர் அண்ணா தலைமையில் திராவிட முன்னேற்றக் கழக அரசு 1967-ஆம் ஆண்டு அமைந்தபோது, தந்தை பெரியார் அவர்கள் திருத்தித் தந்த வரைவின் அடிப்படையில் சுயமரியாதை திருமணச் சட்டம் எனப்படும் ‘தமிழ்நாடு அரசு இந்து திருமணத் திருத்தச்சட்டம்’ என நிறைவேற்றப்பட்டது. 1928-இல் நடைபெற்ற சுயமரியாதைத் திருமணங்கள் உள்பட அனைத்து சுயமரியாதைத் திருமணங்களுக்கும் சட்ட ஏற்பு அளிக்கும் வகையில் முன் தேதியிட்டு அதனை நிறைவேற்றிய பேரறிஞர் அண்ணா, அதனைப் பெரியாருக்குக் காணிக்கையாக்குவதாக அறிவித்தார். இந்தச் சட்டத் திருத்தத்தைத்தான் தொலைநோக்குப் பார்வையுடன் 1928-இல் நடந்த சுயமரியாதை மாநாட்டில் பி.டி.ராஜன் அவர்கள் வலியுறுத்தினார்.

1967-ஆம் ஆண்டு பி.டி.ராஜன் அவர்களின் சீரிய முயற்சியால் நடைபெற்ற நீதிக்கட்சியின் பொன் விழாவில் பேரறிஞர் அண்ணா அவர்கள் கலந்து கொண்டு பொன்விழா மலர் வெளியிட்டுச் சிறப்புரையாற்றினார். 1968-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தலைமையிலான தி.மு.கழக ஆட்சியில் சென்னையில் நடத்தப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின்போது தமிழறிஞர்களுக்கும், காப்பிய நாயகி கண்ணகிக்கும் என 10 சிலைகள் கடற்கரையில் நிறுவப்பட்டன. அதில் கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார் சிலையைத் திறந்து வைத்தவர் பி.டி.ராஜன் அவர்கள்.

முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மதுரையில் நடைபெற்ற பி.டி.ராஜன் அவர்களின் 82-ஆவது பிறந்தநாள் விழாவில் கலந்துகொண்டு, ‘ஆயிரம் பிறை கண்ட அண்ணல்’ எனப் போற்றியதுடன், மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட போது தேவிகுளம், பீர்மேடு பகுதிகளைத் தமிழ்நாட்டுடன் இணைப்பதற்கான போராட்டத்தைப் பி.டி.ராஜன் தலைமையேற்று நடத்தித்தந்த பாங்கினை எடுத்துரைத்தார்.

தமிழுணர்வும் திராவிட இயக்கக் கொள்கைகளில் ஆழமான பற்றும் கொண்ட பி.டி.ராஜன் அவர்கள் வழியில் அவரது புதல்வர் - அரசியல் பண்பாளர் பி.டி.ஆர்.பழனிவேல் ராஜன் அவர்கள் தென்மாவட்டத் தி.மு.கழகத்தின் தூணாகவும், தலைவர் கலைஞர் அவர்களுக்குத் துணையாகவும் இருந்து செயல்பட்டவர். அத்தகைய கொள்கைப் பண்புமிக்க குடும்பத்தின் வழித்தோன்றலாகத் தனது தாத்தா மற்றும் தந்தை ஆகியோரது வழித்தடத்தில் திராவிட இயக்க கொள்கைகளை இறுகப் பற்றிக் கொண்டு அறிவாற்றலோடு நமது திராவிட மாடல் அரசின் திட்டங்கள் நிறைவேறத் துணைநின்று பாடுபட்டு வரும் அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராசன் அவர்களுக்குப் பாராட்டுகள்!

ஒப்பற்ற தனது தாத்தா தமிழவேள் பி.டி.ராஜன் அவர்களுடைய பொது வாழ்க்கையைத் திராவிட இயக்கத்தைச் சேர்ந்த அனைவரும் அறிந்துகொள்ள ஏதுவாக, அவரது வாழ்க்கை வரலாற்றையும், அவரது கருத்துரைகளையும், சான்றோர் பலர் அவருக்குச் சூட்டிய புகழ்மாலைகளையும் தொகுத்து “தமிழவேள் பி.டி.ராஜன் நினைவுகளில் 50” எனும் அரிய நூலை படைத்தளித்திருக்கும் அமைச்சர் முனைவர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராசன் அவர்களுக்குச் சிறப்பு பாராட்டுகள்! வாழ்த்துகள்!

இந்த நூல் திராவிட இயக்க வரலாற்றை அறிய விரும்பும் இளம் தலைமுறையினருக்கு நல்லதோர் அறிவுக் கருவூலமாக விளங்கும். திராவிட இயக்கம் இளைய இரத்தத்தின் வேகத்தையும் மூத்தவர்களின் அனுபவத்தையும் இணைத்துப் பயணிக்கிற இயக்கமாகும். திராவிட இயக்க முன்னோடியான பி.டி.ராஜன் அவர்களின் நினைவை என்றென்றும் போற்றி, அவர்கள் கண்ட இலட்சியக் கனவை நிறைவேற்ற அயராது பாடுபடுவோம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.